www.StudyGuideIndia.com

AI - June - 2011

**8151**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ்

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) பராபரம் ஆ) நீரவர்

இ) உயர்ந்தவர் ஈ) மல்லல்

உ) புனல் ஊ) கடன்

எ) திரு ஏ) அகிம்சை.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) ஆடி + பாடி ஆ) மறவர் + எல்லாம்.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) தருமநெறி ஆ) இராப்பகல்.

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) இன்றியமையாத

ஆ) விடாமுயற்சி

இ) அடக்கமாக.

5. எவையேனும் இரண்டினைப் பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) நான் அடுத்தவாரம் வீட்டிற்கு வந்தேன்

ஆ) குதிரை கத்தும்

இ) நல்லவர்களை உலகம் பாராட்டுவர்.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) சென்று ஆ) செய்தாள்.

7. தொழிற் பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) அளித்த ஆ) வளர்க்கும்.

8. மகாகவி பாரதியார் தமிழ்மொழியைப் புகழ்ந்துள்ளார்.

( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. திருக்குறளைக் கற்று அதன் வழி வாழ வேண்டாமா ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

10. தருமவழியைப் பின்பற்றாதவரை உலகம் தூற்றும்.

( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. கற்றவர்கள் தம் அறிவை பொது மக்களுக்குத் தந்தனர். அறிவு வளர உதவினர்.

( நிகழ்காலமாக மாற்றுக ) 2

12. எதிர்கால இந்தியா உழைப்புத்திறன் மிக்கதாக இருக்க வேண்டும். பொருள்வளம் சிறந்ததாக இருக்க வேண்டும்.

( ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக ) 2

13. எவையேனும் இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் தருக : 2 × 1 = 2

அ) அறிந்து

ஆ) கற்றார்

இ) காண்பேன்

ஈ) வருந்தி.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்

கெடுநீரார் காமக் கலன்.

15. எவையேனும் நான்கு சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக : 4 × 1 = 4

அ) பேரொளி

ஆ) உருகி

இ) உலாவுதல்

ஈ) குளிர்புனல்

உ) புரந்த

ஊ) இராப்பகல்.

16. எவையேனும் ஆறு இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க : 6 × 2 = 12

அ) குற்றியலுகரத்தின் இலக்கணம் எழுதுக.

ஆ) பெயர்ச்சொல்லின் வகைகள் யாவை ?

இ) பால் என்பது யாது ? அதன் பிரிவுகள் யாவை ?

ஈ) தொகைநிலைத் தொடர் என்பது யாது ? அதன் வகைகள் யாவை ?

உ) ஆகுபெயர் என்றால் என்ன ? சான்று தருக.

ஊ) முதற்போலியைச் சான்றுடன் விளக்குக.

எ) பகுபதம் என்றால் என்ன ? அதன் உறுப்புகள் யாவை ?

ஏ) இல்பொருள் உவமையணி என்பது யாது ? சான்று தருக.

17. அடி பிறழாமல் எழுதுக :

அ) 'குடியென்னும் ...' எனத் தொடங்கும் குறள். 2

ஆ) 'சங்கரன் தன் அருளால் ...' எனத் தொடங்கும் பெரியபுராணச் செய்யுள். 4

இ) 'நெல்லும் ...' எனத் தொடங்கும் புறநானூற்றுச் செய்யுள். 4

www.StudyGuideIndia.com

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : 2 × 2 = 4

அ) 'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று'

ஆ) அன்புதான் உள்ளத் துள்ள
அழுக்கெலாம் களையும் என்றார்
அன்புதான் அகிம்சைப் போரின்
ஆயுதம் என்றும் சொன்னார்.

இ) மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா !
பங்கையக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா !

19. கீழ்வரும் பாடலின் பொருள் தெளிந்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி. 4 × 1 = 4

'என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமயமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ ?

-பாரதிதாசன்

வினாக்கள் :

அ) எங்குள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும் ?

ஆ) எவற்றில் சிறந்து விளங்க வேண்டும் ?

இ) இமயமலை போல் எதனை அடைய வேண்டும் ?

ஈ) மற்றவர்கள் என்ன சொல்லக் கேட்க வேண்டும் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 1 × 3 = 3

அ) ''பாயிருள் நீக்கும் மதியம் போல்''

1. பாயிருள் என்பதன் பொருள் யாது ?
2. இவ்வடி பழமொழியில் எந்த அதிகாரத்தில் வருகிறது ?
3. பழமொழியின் ஆசிரியர் யார் ?

*அல்லது*



www.StudyGuideIndia.com

ஆ) ''நாமாக முன்வந்து மேற்கொள்ளும் நோன்பு நல்லது''

1. நோன்பு எதற்கு ஏற்படுத்தப்பட்டது ?
2. நோன்பினால் மனத்துக்கு என்ன ஏற்படும் ?
3. நோன்பு எவற்றைக் குறைக்கவல்லது ?

21. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. 6 × 2 = 12

அ) எது தோடர்களின் செல்வமாகக் கருதப்படுகிறது ?
ஆ) தமிழின் இனிமை எப்பொழுது புலனாகும் ?
இ) மூவேந்தர்கள் என்பவர் யாவர் ? அவர்கள் செய்த சதி யாது ?
ஈ) எப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டும் என்று பாரதியார் விரும்புகிறார் ?
உ) பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையின் விளைவு யாது ?
ஊ) எவையெல்லாம் அழிவு பெறாது ?
எ) கணிப்பொறி குறித்து மக்கள் உணர்ந்துள்ள உண்மைகள் யாவை ?
ஏ) நம் வாழ்க்கையில் உள்ள மூன்று கூறுகள் யாவை ?

22. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி. 7

அ) 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் கருத்தினை அறிஞர் அண்ணாவின் வழி நின்று விளக்குக.
ஆ) கணிப்பொறி நம் வாழ்வில் இன்றியமையாதது என்பதனை விளக்குக.
இ) மக்களுக்குத் தேவையான புதிய அறிவு எத்தன்மை உடையதாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார் ?

23. ஏதேனும் ஒரு தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) காலத்தின் அருமை
ஆ) மாணவரும் பொதுநலத் தொண்டும்
இ) தொலைக்காட்சியும் அதன் பயன்களும்.

24. ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண் மற்றும் முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) இரண்டு நாள் விடுப்பு கேட்டு வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

*அல்லது*

ஆ) நீ கண்டு களித்து வந்த, சுற்றுலா பற்றி நண்பனுக்கு/தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.

*அல்லது*

இ) தெருவிளக்கு எரியாமல் இருப்பது குறித்து மின்வாரியப் பொறியாளருக்கு ஒரு புகார்க் கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 1 + 1 + 2

அ) A friend in need is a friend indeed
ஆ) Make hay while sunshines
இ) Some are born great. Some achieve greatness. Some have greatness thrust upon them.

www.StudyGuideIndia.com